சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஜூலை மாதம் 02 ம் நாள் வியாழக்கிழமை

**இந்து திருமண முதலேற்பு மனு எண்.288/2023**
**(CNR No.TNTH050019252023)**

P.பாலாஜி .... **மனுதாரர்**

/எதிர்/

M.பிரபா .... **எதிர்மனுதார்**

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பு 18.06.2026 ம் தேதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. M.சந்திரன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K.P. மாரிமுத்து, B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான:-

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 26.03.2018 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, இந்து திருமணச் சட்டம் 13(1)(i–a) பிரிவுகளின் கீழ் விவாகரத்து பரிகாரம் வழங்கக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம்:**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 26.03.2018 ம் தேதியன்று சின்னமனூரிலுள்ள மனுதாரரின் இல்லத்தில் வைத்து, இரு வீட்டார் சம்மதத்துடன் திருமணம் நடைபெற்றது என்றும், திருமண வாழ்க்கையின் பயனாக மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் குழந்தை ஏதும் கிடையாது என்றும், திருமணத்திற்கு பின்னர் மனுதாரரும், எதிர்மனுதாரரும் சின்னமனூரில் மனுதாரரின் வீட்டில் தனிக்குடித்தனம்

சென்று வாழ்ந்து வந்தனர் என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர், மனுதாரரிடம் அடிக்கடி சண்டை போட்டு மனுதாரரின் பெற்றோர்களை மதிக்காமலும், வீட்டில் எந்த வேலையும் செய்யாமலும் இருந்து வந்துள்ளார் என்றும், மனுதாரரும் தனது குடும்பம் கௌரவம் கருதி அமைதியாக வாழ்ந்து வந்துள்ளார் என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர் சின்னமனூரில் குடியிருக்க பிடிக்கவில்லை என்று கூறியதால், மனுதாரரும், எதிர்மனுதாரரின் விருப்பப்படி பி.சி பட்டியில் தனியாக வீடு வாடகைக்கு எடுத்து மனுதாரரும், எதிர்மனுதாரரும் வாழ்ந்த வந்தநிலையில், எதிர்மனுதாரர் மனுதாரரிடம் அடிக்கடி ஏற்படும் சிறு சிறு பிரச்சனைகளுக்குக்கூட சண்டைபோட்டுக்கொண்டு அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிடுவார் என்றும், மேலும் மனுதாரர் வெளியூருக்கு வேலைக்கு சென்றபின்னர் தகாத நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு மதம் மாறுவதாக கூறி மதப்பிரச்சாரம் செய்து வந்துள்ளார் என்றும், இவ்வாறு மனுதாரரும், எதிர்மனுதாரரும் சுமார் ஒரு வருடமாக வாழ்ந்து வந்ததில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் மன ஒற்றுமை ஏற்படவில்லை என்றும், எனவே, மனுதாரர் இனிமேலும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ இயலாத சூழ்நிலையை எதிர்மனுதாரரே ஏற்படுத்திக்கொண்டதாலும், எதிர்மனுதாரரை விட்டு மனுதாரர் கடந்த 6 மாதங்களாக பிரிந்து வாழ்ந்து வருவதாலும், மனுதாரர் எதிர்மனுதாரருக்கிடையே சுமூகமான கணவன், மனைவி உறவுமுறை தொடர்ந்து இல்லாத காரணத்தினாலும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இன்றுவரை குழந்தை இல்லாத காரணத்தினாலும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் தொடர்ந்து கணவன்–மனைவியாக வாழ்வதற்கு சாத்தியக்கூறுகள் இல்லாத நிலையில் எந்தவித சரியான காரணமும் இல்லாமல் மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுத்து தன்னுடைய பெற்றோர் வீட்டில் தனியாக மனுதாரரை தவிர்த்து பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரரின் இத்தகைய செய்கையால் மனுதாரர், மனஉளைச்சலுக்கு ஆளாகி மனதளவிலும், உடலளவிலும் பாதிக்கப்பட்டு இருப்பதாலும், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ இயலாத சூழ்நிலையை எதிர்மனுதாரரே ஏற்படுத்திக்கொண்டதால் இனிமேலும் மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ இயலாது என்பதால் மேற்படி மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்குமிடையே கடந்த 26.03.2018ம் தேதி ஏற்பட்ட

திருமண உறவை ரத்து செய்து, விவாகரத்து பரிகாரம் கோரி இம்மனுவினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

**3. எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :–**

மனுவில் இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் யாவும் எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது. அவற்றை மனுதாரரே நிரூபிக்கக்கடமைப்பட்டவராவார். மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 26.03.2018 ம் தேதியன்று சின்னமனூரிலுள்ள மனுதாரரின் இல்லத்தில் வைத்து, இரு வீட்டார் சம்மதத்துடன் திருமணம் நடைபெற்றது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. திருமண வாழ்க்கையின் பயனாக மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் குழந்தை ஏதும் கிடையாது என்பது மறுக்கப்படுகிறது. கரு கலைந்துவிட்டது என்றும், உண்மை சங்கதி என்னவென்றால், மனுதாரரின் மீது எதிர்மனுதாரர் வரதட்சணை கொடுமைக்காக தேனி கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் Cr.M.P.No.1767/2024 என்ற குற்றவழக்கு தொடுக்கப்பட்டு, அதன் உத்தரவின்படி தேனி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 25.09.2024 ம் தேதியன்று குற்ற எண்.23/2024 ஆக மேற்படி மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி மனுதாரர் இந்நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும்போதே, மனுதாரர் கடந்த 20.03.2024 ம் தேதியன்று அருப்புக்கோட்டையை சேர்ந்த ஈஸ்வரன் மகள் ஜெயந்தி என்பவரை சட்டத்திற்கு புறம்பாக இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்றும், மேற்படி மனுதாரரின் செயலானது குற்றவியல் நடவடிக்கைக்கு ஆளானவர் ஆவார் என்றும், இதுசம்பந்தமாக குற்றவழக்கும் தேனி கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் Cr.M.P.No.4570/2024 என்ற வழக்கும் மனுதாரருக்கு எதிராக நிலுவையில் உள்ளது என்றும், எனவே, மனுதாரரின் அசல்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு வழங்க வேண்டும் என இந்த எதிருரையின்மூலம் எதிர்மனுதாரர் கேட்டுக்கொள்கிறார்.

**4. சாட்சியம் :**

இம்மனுவில் மனுதாரர் பாலாஜி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு

செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் பிரபா எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக எ.ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் விவாகரத்து கோரி தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்,

6. தீர்வு :

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது, வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த வழக்கு இறுதி விசாரணைக்கு வந்த போது, உபயமனுதாரர்கள் தரப்பிலும் திறந்த நீதிமன்றத்தில் இனிமேல் சேர்ந்து வாழ்வதற்கு வழி இல்லை என்றும், நீதிமன்றம் மூலமாக விவாகரத்து பெறுவது தான் இருவருடைய வாழ்க்கைக்கு சரியானதாக இருக்கும் என எடுத்துரைக்கப்பட்டது. அதை உறுதிப்படுத்தும் வகையில், மனுவின் மனுதாரர் பாலாஜி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, கடந்த 18.06.2026 ம் தேதியன்று தனது நீதிமன்ற சாட்சியத்தில்,

" எங்கள் இருவருக்கும் 26.03.2018 திருமணம் நடைபெற்றது. திருமணவாழ்வின் பயனாக குழந்தைகள் எதுவும் கிடையாது. எனக்கும் என் மனைவிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு நான் என் மனைவி மீது இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளேன் என் மனைவி என் மீது குற்ற வழக்கு கொடுத்து அது சம்பந்தமாக விசாரணை தேனி கூடுதல் நீதித்துறை மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. அதன் பின்னர் எங்கள் பிரச்சனையை சமாதானமாக பேசி முடித்து தேனி மாவட்ட சமரச தீர்வு மையத்தில் கடந்த 26.03.2026 ல் ஒரு சமரச ஒப்பந்தம் பிறப்பித்து கொண்டோம். அந்த ஒப்பந்தத்தின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.1 ஆகும். சமரச ஒப்பந்தப்படி எனக்கு விவாகரத்து கிடைக்கவேண்டும் என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7. அதேபோல், இம்மனுவின் எதிர்மனுதாரரான பிரபா எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தன்னுடைய சாட்சியத்தில்,

"எங்கள் இருவருக்கும் 26.03.2018 ல் திருமணம் நடைபெற்றது. திருமணவாழ்வின் பயனாக குழந்தைகள் எதுவும் கிடையாது. எனக்கும், என் கணவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு என் கணவர் என் மீது இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளார். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் என்

கணவர் மீது அது சம்பந்தமாக விசாரணை தேனி கூடுதல் நீதித்துறை மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. அதன் பின்னர் எங்கள் பிரச்சனையை சமாதானமாக பேசி முடித்து தேனி மாவட்ட சமரச தீர்வு மையத்தில் கடந்த 26.03.2026 ல் ஒரு சமரச ஒப்பந்தம் பிறப்பித்து கொண்டோம் அந்த ஒப்பந்தத்தின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ. 1 ஆகும். எனக்கு ஆயுட்கால ஜீவனாம்சமாக ரூ.4,25,000/– பெற்றுக்கொண்டேன் சமரச ஒப்பந்தப்படி நான் விவாகரத்து கொடுக்க மனப்பூர்வமாக சம்மதிக்கிறேன். மனுவை செலவுத்தொகையின்றி அனுமதிக்கவேண்டும்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**8.** ஆகையால், மேற்படி உபயமனுதாரர்களின் வாய்மொழி சாட்சியத்தை பரிசீலனை செய்யும் போது, அவர்கள் இனிமேல் சேர்ந்து வாழ வழி இல்லை என்பதும், திருமணம் நடந்த 26.03.2018 ம் தேதிக்குப்பின்னர் அவர்களுக்குள் தொடர் பிரச்சனைகள் ஏற்பட்டு, அவர்கள் கடந்த 6 மாதகாலமாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதும், மேலும், எதிர்மனுதாரர் தனது வாய்மொழி சாட்சியம் மூலம் விவாகரத்து கொடுக்க சம்மதித்து, அவருக்கு ஆயுட்கால ஜீவனாம்சமாக ரூ.4,25,000/–ஐ மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளார். எனவே, இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை எதுவும் இல்லை என்பதால் உபய மனுதாரர்களுக்குள் கடந்த 26.03.2026 ல் ஏற்படுத்திக்கொண்ட சமரச உடன்படிக்கையின்படி விவாகரத்து வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**9.** ஆகையால், மேலே தீர்வு கண்டபடி உபயமனுதாரர்களுக்கும் கடந்த 26.03.2018 ல் நடைபெற்ற திருமண பந்தத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானித்து இந்த மனு பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**10.** முடிவில், இந்த மனு செலவு தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 26.03.2018 ல் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து (Divorce) வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரி பார்த்து பிழை நீக்கம்

செய்யப்பட்டு, 02.07.2026ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.02 17:12:27 +0530

**சார்பு நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> :

ம.சா.1 ... பாலாஜி – மனுதாரர்

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–</u>

ம.சா.ஆ.1 ... திருமண அழைப்பிதழ்

ம.சா.ஆ.2 ... புகைப்படம்.

ம.சா.ஆ.3 ... ம.சா.1ன் ஆதார் அடையாள அட்டையின் நகல்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி :–</u>

எ.ம.சா.1 ... பிரபா – எதிர்மனுதாரர்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :</u>

எ.ம.சா.ஆ.1 ... 26.03.2026ல் ஏற்படுத்திக்கொண்ட சமரச ஒப்பந்தம்

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.02 17:12:34 +0530

**சார்பு நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

Sub Court, UPM
O.P.288/2023
Fair Order
Dated.02.07.2026

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஜுலை மாதம் 02 ம் நாள் வியாழக்கிழமை

**இந்து திருமண முதலேற்பு மனு எண்.288/2023**
**(CNR No.TNTH050019252023)**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுக்கா, சின்னமனூர் டவுன், வார்டு–4, காந்தி நகர் காலனி என்ற முகவரியில் வசிக்கும் A.பழனிச்சாமி அவர்களின் மகன் இந்து சுமார் 23 வயதுள்ள P.பாலாஜி **.... மனுதாரர்**

/எதிர்/

தேனி மாவட்டம், தேனி டவுன், பையர் சர்வீஸ் அருகில், ஓடைத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் முருகானந்தம் அவர்களின் மகள் கார்டியன் முனியாண்டி அம்மத்தாய் அவர்களின் மகளும், இந்து, சுமார் 29 வயதுள்ள M.பிரபா

**.... எதிர்மனுதாரர்**

இம்மனுவானது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 26.03.2018 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, இந்து திருமணச் சட்டம் 13(1)(i–a) பிரிவுகளின் கீழ் விவாகரத்து பரிகாரம் வழங்கக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள்: 04.12.2023

நீதிமன்ற முத்திரைக் கட்டணம் : ரூ.50/– செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பு 18.06.2026 ம் தேதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. M.சந்திரன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K.P. மாரிமுத்து, B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான:-

**நிறைவேற்றாணை**

1. இம்மனு அனுமதிக்கப்படுகிறது.
2. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 26.03.2018 ல் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து (Divorce) வழங்கி உத்தரவிடப்படுகிறது.
3. செலவுத்தொகை இல்லை.

செலவு தொகை பட்டியல் : இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை.

2026 ம் வருடம் ஜுலை மாதம் 02 ம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.02 17:12:42 +0530

**சார்பு நீதிபதி,**

**உத்தமபாளையம்.**